# போர்வாள்

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார் | தனி இதழ் அணா 1½
..., இளஞ்செழியன், B. A. (Hons.) | வெளிநாடு அணா 2

இதழ் | சென்னை 29—11—47 சனிக்கிழமை | வீச்சு 16


## உழைப்பவர் துன்புறல் ஒழிவதென்றோ ?


[கோ. ஜெயராமன்]


செழிப்புற வளர்ந்திடும் பசும்பயிரே உனைச்
சிறப்புறப் பாங்குற வளர்த்தவர் யார் ?
பாரோர் பசிக்குண வளிக்கும் அவர்
பட்டினியால் உடல் சிதைந்திடல் பார். (1)

அழகிய மெல்லிய பட்டுடையே உனக்(கு)
அரியஇத் தோற்றமது அளித்தவர் யார் ?
மேதினியோ ரெலாம் மகிழ்ந்துடுத்தும்நல்
உடையினை செய்தவனின் வெறும் உடலினைப் பார். (2)

முகில்தனில் முட்டுமுயர் கட்டிடமே உனைக்
கூனிக்குறுகி உழைத் தெழுப்பியவர் யார் ?
புவியில் உள்ளவர் வாழ்ந்திட மாளிகை
பற்பல கட்டியவன் மண்குடிலினைப் பார். (3)

ஆலயம் தனில்அமர் ஆண்டவனே உனக்(கு)
அரும்பாடு பட்டே கோயில் எழுப்பியவர் யார் ?
பாலபி ஷேகமுனக் களித்துவிட்டு அவர்
பழங்கஞ்சி தானுமின்றி அலைவது பார். (4)

நெல்லே, உடையே, நீள் கட்டிடமே,
நேர் பெற நின்றிடும் ஆண்டவனே
உலகினர் இன்புற வழிவகுக்கும்
உழைப்பவர் துன்புறல் ஒழிவதென்றோ ? (5)


## சிந்தனை

“சிந்தித்துப் பார்ப்பது ஒவ்வொரு மனிதனுடைய உரிமை மட்டுமல்ல; கடமைகூட.

“மதங்கள், மடாதிபதிகள், கட்சிகள், அரசர்கள், கடவுள்கள்—இவர்களின், இவற்றின் கட்டளைக்காக அஞ்சி சிந்திக்க மறுப்பவன் ஒரு அடிமை; ஒரு கோழை.

“உண்மையான உண்மை விரும்பிகள் பழையன என்பதற்காகவே எவற்றையும் போற்றவும் மாட்டார்கள்; புதியன என்பதற்காகவே எவற்றையும் வெறுக்கவும் மாட்டார்கள். இறந்தவர் உரைத்ததென்று எதையும் நம்பிவிட மாட்டார்கள். இருப்பவர் உரைப்பதனால் எதனையும் புறக்கணிக்கவும் மாட்டார்கள். எப்பொருளை யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருளில் மெய்ப் பொருள் உண்டா என்பதை மட்டுந்தான் அறிந்துகொள்ள அவாவுறுவார்கள். ஞானியானால் என்ன, வேலைக்காரனானால் என்ன, ஆண்டியானால் என்ன, அரசனானால் என்ன, சொன்னவர் யார் என்பதையல்ல—சொல்லப்பட்டது என்ன என்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். ஒரு மனிதன் எவ்வளவு புகழுடன் இருக்கிறான் அல்லது எவ்வளவு செல்வாக்குடன் இருக்கிறான் என்பதற்கும், அவன் சொல்லும் சொல் உண்மையானதா என்பதற்கும் கொஞ்சம் கூட தொடர்பில்லை. அது வேறு; இது வேறு”

—இங்கர்சால்.




விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக என் அருமை நண்பர்கள் சிலருடன் நான் குளத்தூருக்குச் சென்றிருந்தேன். இளைஞர்கள் ஒன்று கூடினால் பொழுதைக் கழிப்பதுதானா கடினம்? வேளாவேளைக்குச் சாப்பிட்டுவிட்டுச் சீட்டாடுவதும் அரசியல் சூழ் நிலையைப் பற்றி ஓயாது தர்க்கம் செய்வதுமாகவே காலத்தைப் போக்கினோம்.

ஒரு நாள் இரவு ஊருக்கு அருகிலுள்ள குளத்தடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். வயிறு நிறைந்தவர்களுக்குத் தானே கடவுளைப் பற்றியும் காதலைப் பற்றியும் பேசத் தோன்றும். ஆகவே எங்கள் கூட்டத்தில் இளைஞர்களின் மனதை அதிகமாகக் கவரும்படியான 'காதலை'ப் பற்றிய உரை பாடல் எழும்பிற்று.

"அம்முகுட்டி இப்படிச் செய்வாளென்று நான் எண்ணவேயில்லை ..." என்று சிவராமன்— என் பார்ப்பன நண்பன் — அழமாட்டாக் குறையாகக் கூறினான். பாவம்! வாழ்க்கையில் முதல் முதலாகக் காதல் வேட்டையில் இறங்கி அவன் பட்ட முதல் அடி அதுதான். ஆகையால் அவன் மிகவும் கலங்கிப் போயிருந்தான். அவனுடன் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அம்முவை அவன் மிகவும் காதலித்திருந்தான். அவளும் அவனை முழுமனதாகக் காதலிப்பதாகக் கூறினதாகவும், தான் அவளை மணம் செய்து கொள்ளப் போவதாகவும் சிவராமன் என்னிடம் கூறியிருந்தான். ஆனால் யாரும் எதிர்பார்க்காத வண்ணமாக அவளுக்கும் மருத்துவகல்லூரியிலேயே ஆசிரியராக இருந்த ஹரிஹர சர்மாவுக்கும் இரண்டு வாரங்களுக்கு முன்தான் கல்யாணம் நடந்தேறியிருந்தது. ஆகவே அவன் ஏமாற்றத்திற்கு அளவில்லாமலிருந்தது.

"காதலாவது கத்தரிக்காயாவது உன் அப்பாவை சீக்கிரமே உனக்காகப் பெண் பார்க்கச் சொல்லுவதுதான் நல்லதுடா!" என்றான் அண்மையில் சகுந்தலை படத்தைப் பார்த்துவிட்டு வந்திருந்த இளங்கோ. எல்லோரும் கொல்லென நகைத்தனர்.

யாரோ இருமும் சத்தம் கேட்டுத் திரும்பினோம். ஒரு வயதானவர் நின்றிருந்தார். வயது 45க்கு மேலிருக்கும். ஆனாலும் நல்ல உடல் கட்டுடனிருந்தார். பாதி தலை, வழுக்கை விழுந்திருந்தது. ஆனால் கண்களில் மட்டும் ஒளி தவழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த ஒளி அல்ல எங்கள் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது; அவர் கையிலிருந்த குழல்தான்.

எங்கள் உள்ளத்தில் எப்படி அந்த எண்ணம் வந்ததோ தெரியவில்லை, அவரையும் அவர் குழலையும் கண்ட உடனேயே அவர் நன்றாகக் குழல் வாசிக்கக் கூடியவர் என்று எங்கள் உள்ளம் கூறிற்று. அங்கிருந்த நாங்கள் அனைவருமே இசை இன்பம் நுகர்வதிலே அடங்காத வேட்கையுடையவர்கள். இசை எனில் எம் உயிர்ப் பொருளாம் என்று என் நண்பன் இளங்கோ இனிய தமிழில் அடிக்கடி இசைபடக் கூறுவான். அப்போதெல்லாம் எங்கள் எல்லோருடைய உள்ளமும் அவன் சங்கீத வாய்மொழிக்கு ஏற்றவண்ணம் சுருதிகூட்டும். இசை எனில் அவ்வளவு ஆசை எங்களுக்கு.

அவரை வரவேற்று எல்லோரும் அவரைச் சூழ உட்கார்ந்து கொண்டோம். வேண்டி வேண்டி கேட்டுக்
கொண்டதின் பேரில் குழ
எடுத்து ஊத ஆரம்பித்தார் அ
தென்றலில் ஊசலாடிக் கொண்
பறக்கும் சிறு பஞ்சுச் சுருள் போ
எங்கள் மனமும் அலை மோதி மே
இசை உலகில் எழும்பிச் சென்ற

அவருடைய குழலோசை எ
தும் படுத்தும் உயர்ந்தும் பிற
தும் வளைந்தும் நிமிர்ந்தும் கட
கனென மடங்கி மடங்கி செ
வழியெல்லாம் நாங்களும் பி
தொடர்ந்து சென்று கொண்டி
தோம். குழலிசை எங்களை எ
லாம் எங்கோ ஓர் உலகத்தி
மெல்ல மெல்ல அழைத்
கொண்டு போயிற்று. நாங்க
அந்த இசை அலைகளின் மீது நீ
நீந்தி மேலேறிச் சென்று கொ
டிருந்தோம்.

"சாவேரி ராகம்!" — யா
எங்களில் ஒருவன் மகிழ்ச்சியே
கூவினான், உரத்த குரலில், இ
யின் இனிமையில் தவழ்ந்து த
ந்து இசைமயமாகவே மாறிவி
குரலில்!

வளர்ந்துகொண்டே வந்த இ
அத்துடன் நின்றுவிட்டது. "
வேரி ராகம்! ... சாவேரி ராகம்
ஆமாம் சாவேரி ராகம்தான் -
என்று அவர் ஊதுவதை நிறு
விட்டு தனக்குத் தானே கூ
கொண்டார். பக்கத்திலிரு
மருத்துவ மாணவனான சிவராம
'மூளைக் கோளாறான ஆசா
யாடா!' என்றான் என் காதே
கேட்கும்படியான குரலில்!

'ஏதோ மனம் உடைந்த
போல இருக்கிறதுடா' என்று கு
குசுப்பான குரலில் இன்னொ
நண்பன் பக்கத்திலிருந்தவனி
கூறிக் கொண்டிருந்தான். அவ
தத்துவ மாணவன் — ஆகையா
அவன் அந்தஆராய்ச்சியில் இற
ஞன். கதாசிரியனான எனக்
அவர் வாழ்க்கையைப் பற்றி
கிளறினால் கதைக்கு ஏதாவ
'ப்ளாட்' (plot) அகப்படு
என்று தோன்றியது.

ஆளுக்கு ஒரு கேள்வியை
போட்டோம், கடைசியில் அ
தன் வாழ்க்கையைப் பற்றி கூறு
தாக ஒப்புக்கொண்டு சொல்
ஆரம்பித்தார். எல்லோரு
நெருங்கி உட்கார்ந்து கொ
டோம். கதை தொடங்கிற்று:—

"இருபது வருடங்களுக்கு மு
என் வாழ்க்கையில் நடந்த

போது உங்களுக்குச் சொல்லப்
கிறேன். என் இருதயத்தில்
று ஏற்பட்ட துடிப்பை, என்
ப் பற்றிய கடந்த கால நிகழ்ச்சி
யெல்லாம் கூறுவதன் மூலம்
றிக்கொள்ளப் போகிறேன்.

இன்று நீங்கள் வாழும் காலம்
று. அன்றிருந்த கால நிலை
று மக்களின் அன்றைய
னைகளும் பண்பாடும் இன்
ய சூழ் நிலையிலிருந்து மிகவும்
றுபட்டவை.

அப்பொழுது நான் 'இண்டர்'
ப்பில் படித்துக் கொண்டிருந்
ன். படிப்பில் அவ்வளவு வல்ல
என்று எந்த ஆசிரியரும்
றியதில்லை. அது உண்மையும்
. மாணவர்களுக்கோ நான்
விளையாட்டுக் கருவி. காரணம்
ன் தனிமையை நாடுபவன்.
தவிட முக்கியமாக, கோயில்
ம், ஆச்சாரம், அனுஷ்டானம்,
சடங்கு சம்பிரதாயம் இவற்
யெல்லாம் மறுத்தவன். புரா
ங்கள் பழமையின் படை வீடு
என்று வெளிப்படையாகவே
ல்லிவந்தவன்; மூட நம்பிக்கை
யும் குருட்டுப் பழக்க வழக்கங்
யும் ஏற்றுக்கொள்ள இசை
மல் எந்நேரமும் அவை பற்
ய தர்க்கம் செய்துவந்தவன்.
வேதான் நான் மற்றவர்களால்
றுக்கப்பட்டேன். பிற மாண
கள் கண்ணில் நான் கேலிச்
திரமாகவும் தென்பட்டேன்.

ங்கள் கல்லூரி சார்பாக நடந்த
ற்போர்களிலெல்லாம் சாதிப்
புகளை எவ்வளவு தாக்கமுடி
மா—தேச அடிமைத் தனத்
குக் காரணமாயுள்ள தன்னம்
கைக்கு உலை வைக்கும் தலைவிதி
வத்திற்கு எவ்வளவு பலமான
கொடுக்க முடியுமோ—அவ்
வும் செய்தேன். பிறர் தூற்ற
குப் பின்வாங்காமல் அவற்
த் தாக்கினேன். எனவே பிறர்
லால் தாக்குண்டேன். நாஸ்தி
என்ற சிறந்த பட்டப் பெய
யும் தலை நிமிர்ந்து ஏற்றுக்
ண்டேன்.

ப்படிப்பட்ட நான், குறுக்கே
ந்தமேல்சாதி என்னும் சுவரை
த்தெறிந்துவிட்டு அதற்கு அப்
இருந்த உயர்சாதிப் பெண்
தியைக் காதலித்தேன். சாதி

கள் இல்லையடி பாப்பா என்ற பாட்டை ஓயாது முணுமுணுத்து வந்த நான் அப்படிச் செய்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் என் வாழ்க்கைக்கு ஒரு ஒளி விளக்காக விளங்கிய அவளை நான் அடைவதற்காக அநேக போராட்டங்களில் இறங்க வேண்டியிருந்தது. கருகிய மொட்டுஆய்விடவில்லை எங்கள் காதல். மலர்ந்தது. அழகாகத்தான் மலர்ந்தது. எங்கள் காதல் அரும்பு நிலையில் இருந்த போதே அதைப் பறித்துவிட எண்ணினர் பலர். ஆனால் அவர்கள் எண்ணத்தை யெல்லாம் எப்படியோ ஏமாற்றிவிட்டு மலரத்தான் செய்தது எங்கள் காதல். ஆனால் மலர்ந்த மலர் பிறகு உதிர்ந்தது. இன்பம் பறி போயிற்று அது ஒரு சோக சம்பவம்.

**சாமிநாதன்** என் கல்லூரித் தோழன். அவன் 'பிராமண ஜாதி.' நான் கணக்கப்பிள்ளை குலம். கல்லூரி மாணவர்களின் ஏசலுக்கு நான் ஆளானதிலிருந்து சாமிநாதனுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இது எனக்கே பல சமயங்களில் வியப்பை அளித்தது. அவன் தந்தை **சுந்தரம் ஐயர்** ஒரு வக்கீல். அவர் தம் சமூகத்தினரால் ஒரு புரட்சி வீரன் என்று அழைக்கப்பட்டார். காரணம், "தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோயிலைத் திறந்து விட வேண்டும்; இல்லை என்றால் இந்து மதமே அழிந்து போகும்" என்று அவர் சொல்லி வந்ததும், பள்ளிப் படிப்பிற்காகத் தன் பெண்ணை ஆங்கிலக் கல்வி நிலையத்திற்கு அனுப்பியதும் தான்—'அடுப்பூதும் பெண்களுக்கு'ம் அறிவைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அரசியல் மேடைகளில் கூச்சல் போட்டதுதான்!

தாயை இழந்த தன் இரண்டு குழந்தைகளையும்—**சாமிநாதனை**யும் **கௌரி**யையும் இரண்டு கண்களைப் போல வளர்த்து வந்தார் சுந்தரம் ஐயர். எத்தனையோ பேர் வற்புறுத்தியும், தான் மறு மணம் செய்துகொண்டால் தன் மக்களுக்கு வாழ்க்கையில்என்னென்ன இன்னல்கள் நேருமோ என்று அஞ்சி, மறுமண யோசனையையே அவர் அடியோடு ஒதுக்கிவைத்து விட்டு,தன் மக்களுக்குநல்ல கல்வியறிவையும், உரிமையையும் அளித்து வளர்த்து வருவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தார்.

கையில் வீணையேந்தி "கலைமகள்" போல வீற்றிருக்கும் தன் மகள் கௌரியைக் கண்டு அடிக்கடி ஆனந்தமுறுவார், அவளுடைய இசையின் மேன்மையைக் கேட்டு சிறு குழந்தை போல ஆரவாரித்து ரசிப்பார். சாமிநாதனையோ தன் கண்ணின் மணியெனக் காத்துவந்தார்.

ஒரு நாளைக்கு சாமிநாதன் கல்லூரியிலிருந்து கொஞ்ச நேரம் கழித்து வந்தால் அவர் படுகிற துன்பமும், கௌரி, 'அப்பா, தலை வலிக்கிறது' என்று சொன்னால் அவர் உள்ளம் துடிக்கிற துடிப்பும் சொல்லி முடியாது. சுந்தரம் ஐயருக்கு தன் மக்கள் மீதிருந்த பற்றும் பாசமும் வேறு யாருக்காகிலும் தங்கள் குழந்தைகள் மீது இருக்குமா என்று நான் அடிக்கடி சந்தேகிப்பதுண்டு.

ஒரு நாள் சாமிநாதன் வகுப்புக்கு வரவில்லை. அதற்கு முன் நாள், உடம்பு சிறிது குணமில்லை என்று அவன் கூறியிருந்ததால் ஏதாவது உடல் சரியில்லாததால்தான் அவன் வகுப்புக்கு வரவில்லையோ என்றெண்ணி அவன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். கீழே ஒருவரையும் காணாததால் மாடிக்கு ஏறினேன். மாடியிலிருந்து வீணையின் ஒலி வந்து கொண்டிருந்தது.

அதுவும் அந்த வீணையிலிருந்து எழுந்த இசை 'சாவேரி' ராகமாக இருந்ததால் அது என்னை மிகவும் கவர்ந்தது. ஏனென்றால் எனக்கு மிகவும் பிடித்த ராகமும்—நான் குழலில் அற்புதமாக வாசிப்பதாக என் நண்பர்கள் கூறும் ராகமும் அதே **சாவேரி ராகம்** தான்!

உள்ளே நுழையாமல் வெளியிலிருந்தே கேட்டுக் கொண்டிருந்தேன் அப்பப்பா! அந்த விரல்களின் ஓட்டமும், இராகத்தினூடே குழைந்து குழைந்து வந்த நெளிவும் சுளிவும் என் நெஞ்சை அள்ளிக் கொண்டோடிய திறத்தைத்தான் நான் என்னென்பேன்!

"என்ன கண்ணா! உள்ளே சென்றுதான் கேளேன். ஏன்

வெளியிலேயே நின்று கொண்டிருக்கிறாய்!'' என்ற சத்தம் கேட்டுத்திரும்பினேன். பின்னே சாமிநாதன் சிரித்துக் கொண்டே நின்றிருந்தான்.

அத்துடன் வீணையினின்று வந்த இசையும் நின்று விட்டது.

இருவரும் உள்ளே நுழைந்தோம். கௌரி எதிரே வந்தாள். அவள் முகத்தில் மாயப் புன்னகையொன்று மின்னலென மின்னி மறைந்தது.

''ஒளிந்து கேட்பது என்பது எல்லாத் திருடுகளையும் விட மிகவும் கெட்டது'' என்றாள்.

''ஒளிந்திருந்து உன் பாட்டைக் கேட்பதே இவ்வளவு கடுமையானது என்றால் என் இருதயத்தில் உன்னை ஒளித்து வைத்திருக்கும் ...... இப்படி கற்பனை ஓடிற்று. ஆனால் அது முடியும் வரை கூட அவள் எதிரே நிற்கவில்லை—எப்படி நிற்க முடியும்—எனவே சிந்தனை அத்துடன் தடைபட்டு விட்டது.

''ஏன் சாமிநாதா வகுப்புக்கு வரவில்லை?'' என்று சாமிநாதனைக் கேட்டேன். சாமிநாதன் பதில் சொல்லவில்லை. ஆனால் கௌரி சொன்னாள்!

''அண்ணாவுக்குக் கலியாணம் ஆகப் போகிறதே உங்களுக்குத் தெரியாதா என்ன!''

அப்படியவள் சாமிநாதனைப் பற்றி கூறும்போது அவன் முகம் சிவந்ததைவிட அவளுடைய கன்னங்களில் தான் அதிக சிவப்பேறியது. அந்தச் சிவந்த முகந்தான் பார்ப்பதற்கு எவ்வளவு எழிலுடன் விளங்கியது! நான் எத்தனையோ முறை அவளிடம் பேசியிருக்கிறேன். பழகியிருக்கிறேன். ஆனால் அன்று அவள் கண்களில் தோன்றி மறைந்த ஒளியையும் குரலில் கலந்திருந்த இனிமையையும் நான் வேறு நாட்களில் கண்டதேயில்லை. நான் ஒருகால் தத்துவ மாணவனயிருந்தால் அன்றைய அவளுடைய ஒவ்வொரு அசைவிலிருந்தும் அவள் மனதை ஆராயப் புகுந்திருப்பேன்.

கொஞ்ச நேரம் கழித்து சாமிநாதன் தனக்கு மனைவியாய் வரப் போகிறவளைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

''கண்ணா! நான் சீர்திருத்தக் கலியாணம் செய்து கொண்டு மற்றவர்களின் முன் எடுத்துக் காட்டாக விளங்கவேண்டுமென்று விரும்பினேன். கல்லூரியில் படித்த பெண் ஒருத்தியை அடையவேண்டும் என்ற விருப்பமும் இருந்தது. அதைவிட இன்னும் கொஞ்ச நாள் கழித்து மணம் செய்து கொள்ள வேண்டுமென்றும் எண்ணினேன். ஆனால் எல்லாம் தவிடு பொடியாய் விட்டது...'' என்றான்.

இது எல்லோருக்கும் இயல்பாக இளமையில் உதிக்கும் எண்ணம். படித்து, நாகரிகமடைந்து, பொது வாழ்வில் ஈடுபட்டு, சமூகத்தைச் செல்லரித்துவரும் மூடப் பழக்க வழக்கங்களையே சமுதாயத்திலிருந்து கல்லியெறிய வேண்டுமென்று விரும்பும் இளைஞர்களிடையே தோன்றி மறையும் ஒரு கிளர்ச்சி.

இதில் எல்லோரும் வெற்றி பெறுவதில்லை. முதல் காரணம் இந்து குடும்ப அமைப்பில் காணப்படும் பிரிக்க முடியாத பாசங்கள். இரண்டாவது தகப்பன் சொத்து பிள்ளைக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தன் மானத்தை விட்டு, சுய அறிவையும் பறிகொடுத்து, அப்பாவின் கட்டுப்பாடுகளுக்குத்தான் ஒத்துப் போவதாக நடித்துக் காட்டும் வெட்கக்கேடான நிலைமை. மூன்றாவது தன் மீது தனக்கே நம்பிக்கையில்லாமை.

அதுபோல, இளமையில், சாமிநாதன், ஓர் சீர்திருத்தக்காரனை இருக்கவேண்டுமென்று விரும்பியதில் வியப்பொன்றுமில்லை.

''அது ஒழியட்டும்; பெண் எப்படி? எதுவரை படித்திருக்கிறாள்?'' என்று கேட்டேன்.

''போடா — போ. அவளுக்கு ஆங்கிலமே கொஞ்சம் கூடத் தெரியாதாமே! இந்த இழவிற்கு என்னடா செய்ய......'' என்றான், தலை குனிந்தபடி.

அவளுக்கு ஆங்கிலம் தெரியாததற்காக இவன் ஏன் வெட்கித் தலை குனியவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. இதற்குள் கௌரி குறும்பு நகை செய்து கொண்டே ''என்னுடைய பழைய ஸ்பெல்லிங் புத்தகத்தைப் பத்திரமாக எடுத்து வைத்திருக்கிறேன் அண்ணா! வேண்டுமானால் மன்னி வந்தவுடன் நீயே அவளுக்கு கற்றுக் கொடுத்து விட்டால் கற்றுக் கொண்டு விடுகிறாள்!'' என்றாள்.

''செய்ய வேண்டியதுதான். உனக்கு வரும் கணவனுக்கும் இசையில் பயிற்சியில்லை யென்றால் நீயும் அவனுக்கு சரிகமபதநிஸ கற்றுக் கொடுக்கமாட்டாயா, ... போலத்தான் என்றான் பதிலுக்...

அவள் முகம் சிவக்க ஓடி... விட்டாள். ஆனால் என் ம... மட்டும் கௌரிக்கு இசைப் பயி... யில்லாதவன் கணவனாக வர... டான் என்று உறுதி கூறிற்... யாருக்குக் கூறிற்று? அதுத... அப்போது எனக்கும் புரியவில்...

கலியாணத்திற்குச் சில ... களுக்கு முன் அவன் வீட்டில் ... பர்களுக்கெல்லாம் அழைப்பு... தாள் எழுதிக் கொண்டிருந்தே...

''கௌரி, கொஞ்சம் 'டீ' போ... டுக் கொண்டு வாயேன்'' என்... கூறி சாமிநாதன் அவளை அ... பினான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அ... கையில் கோப்பையுடன் வந்தா... சாமிநாதனிடம் ஒரு கோப்பை... கொடுத்து விட்டு என்னி... ஒன்றை நீட்டினாள். நான் வா... வதற்குள் அவள் கை தவறி எ... மீது கோப்பை சாய்ந்து விட்ட... பட்ட இடமெல்லாம் சுட்டு வி... டது.

''கௌரி என்ன கண் தெரி... வில்லையா என்ன? கவனித்து செ... வதற்கென்ன'' என்று சாமிநாத... கூச்சல் போட்டான்.

உண்மையில் எங்கள் இரு... கண்களும் குருடாகித்தான் இரு... தன—காதல் எனும் திரை கண்க... மறைத்த காரணத்தால்!

பரவாயில்லை சாமிநாதா ... ஏதோ கை தவறி நடந்து விட்ட... அந்த சூடு ......'' அத்துடன் எ... வாய் அசையாது நின்றுவிட்ட... ஆனால் உள்ளமோ......... அந்த... சூடு மனதில் எரியும் அன... விடவா கடுமையானது என்... பூர்த்தி செய்தது

அவனுடைய அதட்டலைக் கேட்... அவள் கண்கள் கலங்கின. பிற... மௌனமாகவே உள்ளே போ... விட்டாள்.

எந்தப் பெண்ணும், தங்கையோ... மனைவியோ அல்லது தாயோ— எவருமே தன்னை வேறொரு ஆ... வன் முன்னிலையில் கண்டிக்க... படுவதை எப்பொழுதும் விரும்... மாட்டாள். அப்படியிருக்கு... போது கௌரிமட்டும் எப்ப... அதைச் சகித்துக் கொள்வாள்.

(தொடரும்)

# புதுக்கோட்டை போராட்டம்

———+———

[புதுக்கோட்டையில் பொறுப்பாட்சி வழங்க மறுத்தார் மன்னர்—முதலில்! மக்கள் திரண்டெழுந்தனர் தம் உரிமைக்குப் போர் தொடுக்க. திராவிடர் பட்டாளமும் தயங்கவில்லை தன் கடனாற்ற. உரிமைப் போராட்டத்தில் பிற கட்சியினருடன் தோளோடுதோள் கோத்து நின்று, பிறர் எவர்க்கும் சளைக்காத அளவு, புதுக் கோட்டைத் தனியரசு திராவிடர் கழகம் பணியாற்றி இருக்கிறது. பொறுப்பாட்சிப் போர் தொடுக்கப்பட்ட காரணம், அது நிகழ்ந்த முறை, அதில் திராவிடர் கழகத்தின்••பங்கு இன்னபிறவற்றை நன்கு விளக்குகிறார், புதுக்கோட்டை திராவிடர் கழகச் செயலாளர் தோழர் அரவரசன், இக்கட்டுரையில்.]

புதுக் கோட்டை தனி அர
ன் பரப்பு 1185 சதுர மைல்.
தில் வாழும் மக்கள் 1941-ம்
ருட அரசியலார் கணக்குப்
4,38,348பேர். இவர்களில்
ஸ்லீம்கள் 16,975. இந்தியக்
றித்தவர்கள் 19,257. மிச்ச
ள்ளோரில் மிகச் சில ஆரியர்
ர்த்த பிறர் அனைவரும்
ாவிடரே. இம்மக்கள் அனை
ருடைய நல்வாழ்விற்காகத்
ன் மன்னரிடம் 'பொறுப்
ட்சி கொடுங்கள்' என்று
ஸ்தானக் காங்கிரசும், தனி
சுத் திராவிடக் கழகமும் பிற
ம் கேட்டனர். மன்னரும்
ப்டம்பர் 29ம் நாள் முழுப்
ாறுப்பாட்சி வழங்குவதாக
அறிக்கை வெளியிட்டார்.
த அறிக்கையில் 20 உறுப்
ர்களடங்கிய ஒரு அரசியல்
மைப்பு மன்றத்தை திவான்
டுவார் எனவும், அந்த மன்
அரசியலை வகுக்கும் என
, அடுத்த ஆண்டு முடிவுக்
புதிய அரசியலமைப்பு தயா
விடுமென்றும்கூறப்பட்டது.
லும், "மன்றத்தில் உள்ள
உறுப்பினர்களில் 16 பேர்,
துவந்த எல்லோருக்கும் ஓட்
மை என்ற அடிப்படையில்
ர்ந்தெடுக்கப்படுவர். மற்ற
வரில் திவான் ஒருவர்; இரு
பொதுஜன மந்திரிகள்;
ஞரிடி அல்லது விசேஷ
களின் பிரதிநிதியாக அரசியலாரால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர் ஒருவர். திவான் அ. அமைப்பு மன்றத்தின் தலைவராக இருப்பார். அரசியலமைப்புத் திட்டத்தை வகுக்கவும், அதை மன்னரின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கவும் அவருக்கு எல்லா அதிகாரங்களுமுண்டு. மன்னர், மன்னரின் குடும்பம், வாரிசு, சொந்தச் செலவு, தேவஸ்தானங்கள், மைனாரிடிகளின் பாதுகாப்பு, மிச்ச அதிகாரங்கள் ஆகிய விஷயங்கள் பற்றிய அதிகாரம் மன்னரிடம் இருக்கும்" என்று மன்னர் அறிக்கை கூறியது.

இந்த அறிக்கை மக்கள் மனதிலே மகிழ்ச்சியை ஊட்டவில்லை. ஆகவே "60 பேர்களடங்கிய அ. அமைப்பு மன்றம் அமைக்கப்படவேண்டும், மக்கள் விரும்பாத சட்டசபை உடனே கலைக்கப்படவேண்டும், எல்லா அதிகாரங்களும் அமைப்பு மன்றத்திடமே இருக்கவேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து, கோரிக்கைகள் நிறைவேறாவிடில், போராட்டம் நவம்பர் பதினைந்தாம் தேதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. போராட்டம் என்றதும் திராவிடர் கழகம் பின்வாங்கவில்லை. "போராட்டத்தை ஸ்டேட் காங்கிரஸ் முன்னின்று நடத்தும்; முதல் போராட்ட சர்வாதிகாரி தோழர் முத்துச்சாமி வல்லத்தரசு" என்ற அறிக்கை வெளிவந்ததும் புதுக்கோட்டை தனியரசு திராவிடர் கழகம் தன் ஆட்சிக் குழுவைக் கூட்டியது. நாம் போராட்டத்தில் கலந்து கொள்ளலாமா கூடாதா என்ற பிரச்னை பலமாக விவாதிக்கப்பட்டது. கட்சி மாறுபடினும், போராட்டத்தை முன்னின்று நடத்த முயல்வோர் நம் கழகத்தைக் கருவறுக்கும் நோக்கமுடையோர் என்பதை அறிந்தும், 'பொறுப்பாட்சி' என்ற பொதுவான குறிக்கோளிலே 'கட்சி எதுவாயினும், கருத்து எதுவாகிறது. ஆகவே போராட்டதை ஆதரிக்கிறோம். எல்லா வகையிலும் ஒரே முனையில் நின்று ஒத்துழைக்கிறோம்' என்ற தீர்மானத்தை இரம்வாடிரவாக நிறைவேற்றியது. அத் தீர்மானத்தை மன்னரிடம் சமர்ப்பித்த காலை, 'மக்கள் ஆட்சி மலரவேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. அதற்காகவே நாங்கள் போராடுகிறோம். பொறுப்பாட்சிப் போரில் நாங்கள் கலந்துகொள்ளும் காரணமும் அதுவே. அது மட்டுமல்ல, தகுதி, திறமை என்ற போர்வையில் ஓர் கும்பல் அரசியலில் புகுந்து திராவிட சமூகத்தைச் சாய்க்கச் சதி செய்வதை யாங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் சகிக்க முடியாது—புதுக்கோட்டை பழையபடியும் பார்ப்

பனக் கோட்டை ஆகிவிடக் கூடாது என்ற எம் அடிப்படைக் கொள்கையும் போராட்டத்தில் நாங்கள் கலந்து கொள்வதற்குரிய மற்றொரு காரணமாகும். **புதுக்கோட்டை காங்கிரஸ் கேட்க மறந்த தேவஸ்தானமும் மக்கள் கைக்கு மாறவேண்டும்'** என்று மன்னரிடம் விளக்கிக் கூறி, ஆவன செய்யுமாறு கேட்டோம் புதுக்கோட்டை திராவிடர் சார்பில். மன்னர் 'கவனிக்கிறேன்' என்ற தம் பழக்கமான பதிலைப் புதிய மெருகுடன் கூறினர்.

திடீரென நவம்பர் 14ம் நாளன்று, 'திருத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களை பரிசீலனை செய்யவேண்டியிருப்பதால், திராவிடர் கழகம் தன்னுடைய பிரதிநிதியை அனுப்பவேண்டும்' என மன்னரிடமிருந்து அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்று தனியரசு திராவிடர் கழகத்தலைவர் திரு. **பெரியண்ணன்** அவர்களை எங்கள் பிரதிநிதியாக அனுப்பினோம். மற்ற கட்சிகளின் சார்பிலும் அவ்வப் பிரதிநிதிகள் வந்திருந்தனர். தோழர் பெரியண்ணன் கழகத்தின் கொள்கையையும், நாட்டு நிலைமையையும் விளக்கி, சட்டசபை உடனே கலைக்கப்பட வேண்டும், 7500 பேருக்கு ஒரு அங்கத்தினர் வீதம் அ. அமைப்பு மன்றத்தில் இடம்பெறவேண்டும்; தேவஸ்தானம் மன்னரிடமிருந்து மக்கள் கைக்கு மாறவேண்டும்; அ. அமைப்பு மன்றத்தில் பணமூட்டைகளும், பார்ப்பனர்களும் புகுந்து பாட்டாளி மக்களை ஏமாற்றுதவாறு வகைசெய்தல் வேண்டும் என்பன போன்றவைகள் அனைத்தையும் எடுத்துக் கூறினர்.

நவம்பர் 17-ம் நாள் மன்னர் தம் இரண்டாவது அறிக்கையில் மக்களின் பொதுவான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகவும், சட்டசபை உடனே கலைக்கப்பட வேண்டியதுபற்றி தாம் எண்ணிப் பார்த்து விரைவில் அதுபற்றிய அறிவிப்பைத் தருவதாகவும் கூறினர். மக்கள் பொதுவாக வெற்றி பெற்றுள்ளனர். ஆனல் வெற்றியின் முழு உருவம் இன்னும் புலப்படவில்லை என்றே கூறலாம். மன்னரின் அறிவிப்பிற்காகக் கொதித்துக் கொண்டிருக்கும் இரத்தத்துடனும், குமுறிக் கொண்டிருக்கும் நெஞ்சத்துடனும் புதுக்கோட்டை திராவிடர்கள் காத்திருக்கின்றனர். தனியரசு திராவிடர் கழகம் முழு வெற்றி பெறுவது உறுதி என்றே நம்புகிறோம்.

கிடைக்கும் வெற்றியை பயன்படுத்தும் முறைதான் மிகவும் கவனித்தற்குரியது. ஒரு அதிகார வர்க்கம் ஒழிந்து, அதே இடத்தில் மற்றொரு அதிகார வர்க்கம் தோன்றுவதை மக்கள் சகிக்கமுடியாது. கிடைத்த வெற்றியை ஆரியர் தமதாக்கி, நம்மை நாத்திகராக்கி, என்றென்றும் அழுத்திவிடத் திட்டமிடுகின்றனர் என்பதை புதுக்கோட்டை திராவிடர்கள் அறிந்து அரசியலமைப்பின்போது விழிப்புடன் இருக்கவேண்டுமென்பதே தனியரசு திராவிடர் கழகத்தின் கருத்து. கழகம் கூறுவதெல்லாம் 'அரசியலமைப்பு சபையிலே அதிகாரவர்க்க வாடை வீசக்கூடாது. அது ஜனநாயக மணம் கமழும் மக்கள் மன்றமாக அமைய வேண்டும்' என்பதே.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க ஆட்சி அழிந்த பிறகு, நாட்டில் நடக்கப் போகும் நாலுவிதமான நற்காரியங்களைப் பற்றி முன்பு இந்தி

யத் துணைக் கண்டத்துத்
யத் தலைவர்கள் பறையற்
தனர். 'நயவஞ்சகர் நலி
கொடுங் கோலர்களின் செ
டம் அடக்கப் படும், முடி
ஒழிந்து, குடியரசு கோல்
சும், மூடத்தனத்தை வளர்
மக்களை மோசம் செய்யும்
தையாளர்களின் வாழ்வு
யும், 'பாமர மக்கள் பயன
வர்' என்றெல்லாம் உ
குரலிலே பேசி மக்களி
மதிப்புப் பெற்ற "தியாகிக
அநேகர். ஆனல் அவ
சொல்லியன வெல்லாம் இ
நடைபெறுகின்றனவா என்
இல்லை. கொள்ளையும், செ
யும் நாட்டிற்குத் தொல்லை
அவரவர் தம் உயிர் தப்பி
போதும் என்ற எண்ணமுன
வராய் மக்கள் அகதிகள
கிளம்பி அங்குமிங்கும் க
டும் காட்சி ஒன்றே போ
நாட்டுமக்களின் நல்வாழ்வ
நற்சாட்சிப் பத்திரம் வா
இந்த துர்ப்பாக்கிய நிலை
கோட்டையிலும் ஏற்பட
கோட்டை திராவி
கழகம் ஒருபோதும் இ
யாது. மக்கள் நல
பற்றி இப்பொழுது அக்
காட்டும் தலைவர்கள், மக்
காகவே உழைக்க வேண்
என்பதை, பதவியைப் பகி
கொள்ளும் காலை மறந்துவி
மனதில் வைக்கவேண்
இல்லையேல் இன்று நியாய
கோரிக்கைகளை அடை
காக புதுக் கோட்டையில்
வகுத்து நின்ற திராவிடர்
டாளம் அன்றும் அநீதி
தொலைக்கத் தயங்காது
பதை எச்சரிக்கிறோம்—
வுடன்; மக்கள் ஆட்சி
வேண்டுமென்ற ஆசையுட

# நிலக்கரிஸ்தான் எம் பிறப்புரிமை!

ற்பட்டு விட்ட பாகிஸ் னேயும், இனி ஏற்பட க்கும் திராவிடஸ்தானேயும் பி செய்வதற்காக, ஆரியஸ் கிளப்பி விட்ட கூச்சலோ நிலக்கரிஸ்தான் என்றெண் நீர்கள். அப்படி ஒன்று லே. இந்த உரிமை முழக் தை எழுப்பியவர்கள் ஆரியர் லர்; முதலாளிகள்—நிலக் சுரங்கச் சொந்தக்காரர்கள். த்தையும் அதன் வழியே வான பண்பாட்டையும் டி தனி நாடு கேட்டார் ப் ஜின்னு. இனத்தையும், ம் வாழ வேண்டிய முறை யும், அதை வாழ விடாது க்கும் வடநாட்டு வணிக தர்களின் சுரண்டல் இயந் ன்மையையும் முன்வைத்து விடத் தனி அரசு நிறுவு ன் என முழங்குகிறுர் திரா ர் தலைவர் பெரியார் இராம . இந்த இரண்டும் நியாய ் கோரிக்கைகள். மக்கள் சி மலர வேண்டும் என்ற ய கோட்பாட்டின் அடிப் யில் எழுந்தவை இம் க்கங்கள். 'மக்களால் மக்க காக மக்கள் ஆட்சி' என்ற வமே பாகிஸ்தான் திரா நாடு கோரிக்கைகளின் நாடி. ஆனல் நிலக்கரிஸ் கேட்கப் படுகிறது முத ிகளால், முதலாளித்வ ச்சிக்காக, முதலாளிகளின் மையை முன்னிட்டு.

கில இந்திய நிலக்கரி சுரங் சொந்தக்காரர்கள் சங்கம் ற திங்கள் வடநாட்டில் த தீர்மானம் இது:—

வங்காளத்திலும் பீகாரி ம் நிலக்கரி சுரங்கங்கள் ளமாக உள்ள பகுதி ா மட்டும் தனியாகப் த் தெடுத்து, அவற்றை ஒரு மாகாணமாக உரு வாக்க வேண்டும். இந்த மாகாணத்திற்கு சட்ட சபை, மேல் சபை, அமைச்சர் குழு, கவர்னர், கவர்னர் பரிவாரங்கள் இன்னேரென்ன பிற தேவை யில்லை. கவர்னர்—ஜென ரலின் நேரடி அதிகாரத் திற்கு உட்பட்ட ஒரே ஒரு கமிஷனர் இருந்தால் போதும்! நிலக்கரி சுரங் கங்கள் பீகார் வங்காளம் என்னும் இரு மாகாணங் களிலும் துண்டு பட்டுக் கிடந்தால், அந்தந்த மாகாண ஆட்சியாளர்கள் வெவ்வேறு கொள்கைகள் கொண்டிருக்கக் கூடுமாத லால், நிலக்கரித் தொழில் நன்கு வளராது போய் விடும். அது மட்டு மல்லா மல், நிலக்கரித் தொழில் ஒரு மாகாணத்தில் சிறப் புற்று ஓங்கியும் மற்ற மாகா ணத்தில் நொறுங்கிச் சிதைந்தும் போய்விடக் கூடும். இந்த ஆபத்தைத் தடுப்பதற்காகவே நாங்கள் நிலக்கரி மாகாணம் கேட்கி ரேம்."

நல்ல வேளே! இந்த முதலா ளித்வத் தொத்து நோய் நிலக்கரி முதலாளிகளோடு நின்று விட் டது, மற்ற வணிக வேந்தரிடம் பரவாமல்! இல்லையானல், சென்னை "மெயில்" கூறியிருப் பது போல இரும்புக் கனிகள் உள்ள இடங்களே யெல்லாம் ஒன்று சேர்த்து, இரும்புஸ்தான் அல்லது டாடாஸ்தான் அமைக்க வேண்டு மென்று இரும்பு முத லாளிகள் (இரும்பு போல் கடின உள்ளம் படைத்த முதலாளிகள் என்று அர்த்தப் படுத்தி விடா தீர்கள்; இரும்புச் சுரங்க முதலா ளிகளைத்தான் குறிப்பிடுகிறேம்) கூறவும், பருத்தி மாங்கள் ஏரா ளமாக உள்ள இந்தியப் பகுதி களை ஒன்று திரட்டி பருத்திஸ் தான் அமைக்க வேண்டுமென்று பருத்தி முதலாளிகள் போர் முரசு கொட்டவும், நெல் விளை யும் நிலங்களின் தொகுதி நெல்லிஸ் தான் ஆகவேண்டுமென்று நிலப் பிரபுத்துவம் கூக்குரலிடவும், தேயிலை தோட்டங்கள் உள்ள பகுதிகளின் கூட்டு மொத்தம் தேயிலைஸ்தான் ஆகவேண்டுமென தேயிலைத் தோட்ட முதலாளி கள் தம் பிறப்புரிமையை நிலை நாட்டவும் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு முன்வந்திருப் பர் அல்லவா?

முதலாளித்வமே! உன் திரு விளையாட்டு இவ்வளவு தானு? இன்னும் உண்டா?




# போர்வாள்

29—11—47 சனிக்கிழமை

## சனாதனம் சாய்ந்தது! சமதர்மம் எழுந்தது!

திருவையாற்று அரசர் கல்லூரியில் பல ஆண்டுகளாகப் படமெடுத்தாடிவந்த பார்ப்பனீயம் நவம்பர் 25-ல் கல்லறையிற் புகுந்தது—இல்லை—புகுத்தப் பட்டது. அங்கு, அந் நாள், சனாதனம் சாய்ந்தது; சமதர்மம் எழுந்தது! வர்ணாஸ்ரமம் தாழ்ந்தது; பகுத்தறிவு உயர்ந்தது. புன்மை மறைந்தது; புரட்சி நிறைந்தது. புல்லர்தம் போக்கு பொசுக்கப் பட்டு, தமிழர் கருத்து செம்மாந்து நின்றது. ஆம், அங்கு திராவிடம் வென்றது, ஆரியம் வீழ்ந்தது.

திராவிட மாணவர் உலகம் பெற்ற பல வெற்றிகளில் ஒன்று திருவையாற்று நிகழ்ச்சி.

எத்தனையோ ஆண்டுகளாகத் திருவையாற்று அரசர் கல்லூரியைச் சேர்ந்த ஆரிய மாணவர்கள் திராவிட மாணவர்களுடன் ஒன்றாய் இருந்து உண்ண மறுத்து வந்தனர். "மேட்டுக்குடி மக்களாகிய நாங்கள் தாழ்ந்த குலத் திராவிடருடன் ஒரே இடத்தில், ஒரே வரிசையில், ஒத்த நிலையில் நின்று உண்பதோ—அதற்கு எம் உள்ளம் ஒப்புமோ—எம் குலம் இந்த நீச ஏற்பாட்டிற்கு இசையுமோ?" என்று கேட்டுவிட்டு, "முடியாது—உடன் உண்ண முடியாது—யாம் ஒப்ப முடியாது—சேர்ந்திருக்க முடியாது—உயர்வு தாழ்வு அற்றுப் போவதற்கு இசைவதென்பது முடியாது—இல்லை, முடியாது, ஒருக்காலும் முடியாது" என்று அழுத்தந் திருத்தமாகப் பேசி வந்தனர் ஆரிய மாணவர்கள். பேசி வந்தனர் என்றால் வெறும் சுலோகங்களை உச்சரித்துக் கொண்டு அல்ல—சங்கராச்சாரிகளின் பண பலத்துடன்! "ஹிந்து" நாளிதழின் காரசாரமான தலையங்க பலத்துடன்! மறைந்த மகா கனங்களின் வெள்ளி நாக்குப் புலமை தம் செயலுக்கு அரண் செய்கிறது என்ற பூரிப்புடன்! டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரிகள் போன்ற வழக்கறிஞர்கள் தம் கோணல் சேட்டைக்குத் "ததாஸ்து" கூறுகின்றனர் என்ற எக்காளத்துடன்! "பிராமணர்க்கு ஆபத்து" என்று கட்டுரை தீட்ட ஆரியக் "காற்றாடிகள்" உண்டு அங்கங்கே என்ற மனத் துணிச்சலுடன்!

மூன்றாண்டுகளுக்கு முன்பு அரசர் கல்லூரி மாணவர்கள் அனைவரும் ஒன்றாயிருந்து உண்ண வேண்டியதே என்று தஞ்சை மாவட்ட ஆட்சிக் கழகத்தினர் கட்டளை பிறப்பித்த போது, தென்னாட்டில் எவ்வளவு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது! வர்ணாஸ்ரமம் எத்தனை உரத்த குரலில் "இது அடுக்குமா" என்று கேட்டது! மித்திரனும் ஹிந்துவும் "விட்டோமா பார்" என்று கூறிய சபதந்தான் எத்தனை பேரை நடுங்க வைத்தது! அந்த கடுக்கத்தின் அதிர்ச்சி ஆட்சிப் பீடத்தைக் கூட எந்த அளவுக்கு ஆட்டங் கொடுக்கச் செய்தது! அடே அப்பா! ஏதோ கொடுஞ் செயல் ஒன்று நிகழ்ந்து விட்டது போ[ல]
அல்லவோ ஆரியக் கூட்ட[ம்]
ஆர்ப்பரித்தது அந் நா[ள்]
நினைத்துப் பார்த்தால் எவ்வள[வு]
வெட்கப் பட்டிருக்க வேண்[டு]
அந்தக் கூட்டம் தம் செய[ல்]
எத்துணை இழிவானது என்ப[து]
குறித்து! ஆனால் அவர்க[ள்]
வெட்கப் படவில்லை—வெட்[க]
படுவதென்பது அவர்கள் அ[க]
ராதியில் இல்லாத ஓர் சொல்[லாக]
மாறாக மன்றமேறி, மார் தட்[டி]
கூறினர், ஆரியர் உயர்ந்த[வர்]
திராவிடர் தாழ்ந்தவர்—என[வே]
இருவரும் உடன் உண்ண[க்]
கூடாதென்று.

சூழ்ச்சி பல செய்தனர், ச[ம]
தர்மத்தைச் சாய்த்தனர், வ[ர்]
ணாஸ்ரமத்துக்கு அரசு கட்டி[ல்]
அமைத்தனர், சனாதன முர[சு]
கொட்டினர், எப்படியோ எ[வ்]
வண்ணமோ ஏதவத்தாலே
மீண்டும் ஆரியர்க்கு வேறு இட[ம்]
திராவிடர்க்கு வேறு இட[ம்]
என்ற அநீதியை நிலை நாட்டின[ர்]
இந்த அநீதியை எதிர்த்துத்தா[ன்]
திராவிட மாணவர்கள் பே[ார்]
முரசு கொட்டினர் சென்[ற]
கிழமை. வெற்றியும் பெற்றன[ர்]
வாழ்க அவர் திறம்!

"ஆரிய மாணவர் திரா[விட]
மாணவருடன் ஒன்றாயிருந்[து]
உண்ணவிட்டால் தொலைகி[றோம்]
கள்! இதற்கு ஏனோ இவ்வள[வு]
கவலையும் போரும் பூசலும்[!]
என்று கேட்கத் தோன்[றும்]
சிலருக்கு. "இது ஒரு சி[று]
நிகழ்ச்சி. இதைப் பெரி[து]
படுத்தி நீர் ஓர் தலையங்கம் தீ[ட்]
டலாமோ?" என்று ஐயவி[னா]
எழுப்பவும் முந்துவர் சில அ[றி]
மேதாவியர். "பாரும்! பாரு[ம்]
போர்வாளில் வகுப்புத் து[வே]
ஷம்" என்று மாஸ்கா[ர]
மாண்பினை எடுத்துரைக்கும்
தடியோடு சாக்காக, இல[ை]
செருகலாக, சில வார்த்தை[க]
அப்பக்கம் இப் பக்கம் ப[ா]

காண்டு, விசவும் துணிவர்
புரட்சிப் பிரியர்கள். அவர்
வர்க்குமே சொல்கிறோம்,
மத்தின் பால பாடமே
அனைவரும் ஒத்த உரி
னர் என்பதுதான். ஒத்த
(Equity of rights)
மையினாலேயே ஒத்த
(Equity of pro-
y) இலலாது போயிற்று.
வுரிமை இல்லை; எனவே
பொது உடைமை இல்லை
ஆயிற்று. பொது உட
கட்டிடத்தை எழுப்பு
முதலில் பொது உரிமை
ம் கடைக்காலை—அடிப்

படையை உருவாக்கித் தீர வேண்டும். அடிப்படை அற்ற கட்டிடம் புயலுக்குத் தாங்காது; பொது உரிமையற்ற பொது உடைமையும் அப்படித்தான். இந்த நாட்டில் பொது உடைமை விழைவோர் சிலர் பொது உரிமை பற்றி சிந்திக்கவே நடுங்குகின்றனர்; பொதுவுரிமை இல்லாமலே பொதுவுடைமை வந்துவிடும் எனப் பொய்க்கனவும் காண்கின்றனர். கடைக்கால் அற்ற கட்டிடம் நிலைக்கும் என எண்ணுகின்றனர் அன்னார்—நம் அனுதாபம் அவர்கட்கு.

பொதுவுடைமை வருமுன் வந்து தீரவேண்டிய பொதுவுரிமைப் போராட்டங்களில் ஒன்று திருவையாற்று நிகழ்ச்சி. எனவேதான் அங்கு திராவிட மாணவர் பெற்ற வெற்றி கண்டு நாம் பெருமித முறுகிறோம். மக்கட் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வில்லை என்பது அங்கே நிலை நாட்டப் பட்டது—சனாதனம் சாய்ந்தது! அது சமதர்மப் போராட்டத்தின் முதல் கட்டம்—எனவே நம் வாழ்த்து அவர்கட்கு!

**எழுக சமதர்மம்! வீழ்க சனாதனம்!**

---


## அறிவிப்பு.

# அன்பன் லிமிடெட், சென்னை.

(1913-ம் ஆண்டு இந்தியக் கம்பெனிகளின் சட்டத்தின்படி பதிவு செய்யப்பெற்றது.)

முதல் ரூ. 5,00,000. பங்கு ஒன்றுக்கு ரூ. 100. 5,000 பங்குகள்.

**நோக்கம் :**

தமிழ்நாட்டு வாழ்வையும், தமிழ் வளர்ச்சியையும், தமிழர் நலனையும் கருதி **அன்பன்** என்னும் பெயரிய 'நாள்தாள்' ஒன்றை நன்முறையில் நடத்துதல்; பதிப்பகமும், அச்சகமும் தோற்றுவித்தல்.

செய்தி வெளியிடும் முறையில் **அன்பன்** என்னும் நாள் தாளில் சில சிறப்பியல்கள் காணப்படும். **அன்பன் தமிழ்நாட்டுத் தலைவர்களைப் பற்றிய செய்திகளையும், தமிழர் இயக்கச் செய்திகளையும் முதன்மையான இடத்தில் விரித்துரைக்கும்.** தமிழ்நாடு கலைத்துறையில் முன்னேற்றமடைதற்கு வேண்டுவன செய்யும்.

இனிய எளிய செந்தமிழ் நடையில் செய்தித் தாள் நடத்தப்படும். தொழில் துறை முன்னேற்றத்தையும், தொழிலாளர் நலனையும் கருதி, செய்தித்தாள் தொண்டு செய்யும். எல்லாத் துறைகளிலும் எக்காலத்திலும் **அன்பன்** நாட்டுக்கு நல்வழி காட்டும்.

**டைரக்டர்கள் :**

1. ரெவரெண்டு அருள் தங்கையா, சென்னை.
2. ஹாஜி எம். அப்துல் ரஹ்மான் சாஹிப், வணிகர், சென்னை.
3. திரு. எஸ். டி. இராமலிங்க முதலியார், வணிகர், சென்னை.
4. திரு. பி. ஏ. தங்கசாமி, பி. ஏ., எம். எல். வழக்கறிஞர், பாளையங்கோட்டை.
5. டாக்டர் ஆர். வேதபோதகம், நாசரேத், திருநெல்வேலி.
6. திரு. கச்சி மு. நடேச முதலியார், வணிகர், நிலக்கிழார், காஞ்சிபுரம்.
7. திரு. பி. சி. மாணிக்கவாசகம், (காஞ்சி மணிமொழியார்) அச்சகத் தலைவர், 'போர்வாள்' ஆசிரியர், சென்னை.
8. திரு. பி. இராமசாமி நாடார், வணிகர் சென்னை.
9. பேராசிரியர் சா. த. சற்குணர், பி. ஏ., தமிழ்ப் பேராசிரியர், தாம்பரம்.
10. ஜனாப் ஏ. எம். அல்லாப்பிச்சை சாஹிப், பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர், சென்னை.

**நிர்வாகம்.**

டைரக்டர்கள் பொறுப்பில் நிர்வாகம், ரெவரெண்டு அருள் தங்கையாவை மானேஜிங் டைரக்டராகக் கொண்டு நடத்தப்பெறும்.

**பாங்க் :** இந்தியன் பாங்க் லிமிடெட்.

பங்குக்குரிய விண்ணப்பப் பாரங்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் :

[illegible]அன்பன் லிமிடெட்,
[illegible]லவார் அக்ரகாரம் வீதி,
தண்[illegible]யார்பேட்டை, சென்னை.



# ஊடும் ஏடும்

## அகப் பொருள் இலக்கணம், நடைமுறையில்!

"ஊடலுக்குப் பின் கூடல்" என்பது அகப் பொருள் இலக்கணத்தில் ஓர் முக்கியமான பகுதி. ஏதோ ஒரு காரணம் பற்றி (காரணம் முக்கியமானதாக இருக்கவேண்டுமென்ற நியதி இல்லை) தலைவன்பால் தலைவிக்குக் கோபம் பிறக்கும். "கோபம்", தலைவியின் உடை அலங்காரத்தைக் குலைக்கும்; முடி அழகைச் சிதைக்கும்; அழகிய அணிகலன்களைக் கழற்றி எறியச் சொல்லும்; கண்களில் பிறக்கும் ஒளியையும், இதழ்களில் அரும்பும் புன்னகையையும் தடுக்கும். வரையாத ஓவியமென விளங்கிய தலைவி, கவிழ்ந்த தாமரையெனப் பொலிவிழந்து விளங்குவாள். தலைவன் மீது தான் கொண்ட சீற்றத்தைத் தெரிவிப்பதற்காகத் தலைவி மேற்கொள்ளும் போர் முறை இது. நிலையான கோபம் அல்ல இது; நீங்காத சீற்றமும் அல்ல. ஒரு நாள் இருநாள் பொறுத்து, சில சமயம் ஒரு கிழமை இரு கிழமை கழித்து, சில சமயம் ஒரு சில விநாடிகளிலேயே கூட சீற்றம் தணியும். தலைவனும் தலைவியும் காதல் வாழ்க்கையில் பழையபடி மிதக்கத் தலைப்பட்டுவிடுவர். இடையே நிகழ்ந்ததே ஊடல்—சீற்றப் பகுதி—இது இல்லாவிட்டால் காதல் வாழ்க்கை அவ்வளவு "ருசி"யாய் இருக்காது என்பர் அகப்பொருள் வல்லார். ஆமாம் நிழல் அருமை வெயிலில்தானே தெரியும்.

இந்த "ஊடலுக்குப் பின் கூடல்" அடிக்கடி நடைபெறுகிறது இந்தியாஎனும் இத்துணைக் கண்டத்தில். கம்யூனிஸ்ட்—காங்கிரஸ் குடும்பத்தில் இந்த ஊடலும் கூடலும் அபூர்வப் பொருள்கள் அல்ல; நித்திய நிகழ்ச்சிகள். கொஞ்ச காலம் கம்யூனிஸ்ட் தலைவி காங்கிரஸ் தலைவனிடம் "கோபித்துக்" கொள்வதும், சில பல நாள் கழித்து, கோபம் குறைந்து, "விரக தாபம்" மிகுந்து, "தலைவா! உன் பெற்றி இன்று அன்றோ கண்டேன்!" என்று தலைவி பாசுரம் பாடுவதும், அது கேட்ட தலைவன், "உன் அருமை தெரியாது, உன்னை வாட்டமுறச் செய்தேனே, பாவி நான்" என்று தன்னையே தான் நொந்து கொள்வதும் இந்த இந்தியாவில் சர்வ சாதாரண சம்பவங்களாய் விட்டன.

சென்ற ஆண்டு, திடீரென்று, காங்கிரஸ், கம்யூனிஸ்டுகளையெல்லாம் வெளியே விரட்டிற்று. ஆகஸ்டு புரட்சியில் எம்மைக் காட்டிக் கொடுத்த துரோகிகள், கொடியர்கள், பாதகர்கள் என்றெல்லாம் தேசியவாதிகள் பொதுவுடமையாளர்களைத் தூற்றி[illegible]ர். கம்யூனிஸ்டுகளும் வெளியே[illegible]னர் உன் யோக்யதை எ[illegible]க்குத் தெரியாதா என்று செ[illegible]ால்லிக்கொண்டு! பிறகு
நடைபெற்ற சட்டமன்றத்
தல்களின் போது கம்யூனி
கள் காங்கிரஸ்காரர்களை எ
கக்கூடச் செய்தனர்; காங்கி
பணமூட்டைகளின் ஸ்தாப
—பூர்ஷுவாக்களைக் சூத்
தாரர்களாகக் கொண்ட இ
கம்—பாட்டாளிகளை முத
வர்க்கம் சுரண்ட அநுமதிக்
கட்சி—வர்க்கப் போராட்
திற்காக மகத்தான முறை
ஜன சக்தியைத் திரட்டமுடி
அமைப்புடைய ஸ்தாபனம்
றெல்லாம் (இது என்ன
புதிய தமிழ்நடை என்
என்னைக் கேட்காதீர்கள்; இ
முற்றும் கம்யூனிஸ்டுக
குழூஉக்குறிச் சொற்கள்)
யூனிஸ்டுக் கட்சி பதிலுக்
பாணம் தொடுத்தது, காங்கி
மீது. நாம் கூட நினைத்தே
கம்யூனிஸ்டுகள் உண்மை
உணரத் தொடங்கிவிட்ட
போலும் என்று.

ஆனால், என்ன ஆச்சரி
திடீரென்று, ஒருநாள், க
னிஸ்ட் தலைவர் ஜோஷி "
சர்க்காரை ஆதரியுங்கள்" எ
டுழக்கமிடத் தொடங்கி
எல்லாக் கம்யூனிஸ்டுக
ஆமாம், ஆமாமாம் எ
உடுக்கை அடிக்கத் தொட
விட்டனர். பிற்போக்குச்
கள் நேரு அரசினரைக் கவி
கப் பார்க்கின்றனவாம்! மக்
முன்னணி நேருவின் பக்
திரட்டப்பட வேண்டு
இல்லையேல் ஆபத்து இந்தி
விற்கு நிச்சயமாம்—கம்யூனி
களின் புது "ப்ளேட்" இ
ஊடல் முடிந்துவிட்ட
"கூடல்" ஆரம்பம்!

"அவர்கள் எப்படியோ
கட்டும்; அது அவர்களுடை
குடும்ப விவகாரம்; அது
நமக்கென்ன சார்" என்கி
"போர்வாள்" நிலையத்
பொன்னன். பொன்

ம்புக்காரன் தான், ஆனால்
ன் சொல்வதிலும் கொஞ்சம்
யம் இருக்கத்தான் செய்
து!

### ர்த்தி, வேண்டியது தான்!

சன்னை அமைச்சர்கள்
க்கடி டில்லிக்குப் போக
ண்டிய கட்டாயம் இருப்ப
, சொந்தத்தில் ஒரு
னூர்த்தி இருந்தால் நல்லது
று எண்ணுகின்றனராம்
ன்னை அரசிபலார். நியாயந்
ன! "டில்லி" சென்னையை
ம் வரை, திராவிடத்தின்
வட நாட்டவர் கையில்
ண்டு கிடக்கும் வரை,
சலோ என்னும் முழக்கம்
ன்னாட்டில் வீறி எழுந்து
தானிகளையும் குஜராத்தி
யும் மார்வாடிகளையும்
த அகத்துக்குப் போகுமாறு
புறத்தும் வரை, சென்னை,
லிக்குத் தலைவணங்கி, கரம்
த்து, "சாஷ்டாங்க நமஸ்
ம்" செய்து கொண்டு இருக்
னே வேண்டும்! திராவிட
திராவிடருக்கே என்னும்
மை முழக்கம் திராவிடம்
வதையும் சுற்றி வளைத்து
ற்றிச் சங்கு ஊதும் வரை
லிக்குப் போய்ப் போய்
ன வர வேண்டும் சென்னை
மச்சர்கள். விமானம்
ண்டியது தான் அதற்கு!
தூர் வேலாண்டியின் பக்
க்குக் காவடி வேண்டாமா,
போல!

### றுங்கள்! இருங்கள்!

வம்பர் 15-ம் நாள், வடார்க்
மாவட்டத்தைச் சேர்ந்த
ழ்ப் புலவர்கள் அறுவர்
அமைச்சர் கனம் அவினா
க்கனாரைப் பேட்டி கண்டு
துயர் களைய வேண்டினராம்.
பாறுங்கள்! இருங்கள்!"
றாம் அமைச்சர். என்ன
மையான சொற்கள்!
"பொறுங்கள்! இருங்கள்!"
ஆம்! வறுமை யென்னும் குளவி
குடும்பத்தைக் கொட்டத்தான்
செய்யும்; விலைவாசி கிடு கிடு
வென மலையுச்சிக்கு ஏறத்தான்
செய்யும்; பெறும் ஊதியம் மிக
மிகக் குறைவாய் இருக்கத்தான்
செய்யும்; வாழ்க்கை எதற்கு
இந்நிலையில் என்று நொந்து
போன நெஞ்சு கேட்கத்தான்
செய்யும்—இது சகஜம்! ஆனால்
இதற்காகத் துக்க வாரம் கொண்
டாடுவதா? துக்கம் தீரவில்லை
யேல் புரட்சி செய்வோம் என்று
கனல் கக்குவதா? சிறையும்
செல்வோம்—மீட்சி இல்லையேல்
உயிர் மாளவும் செய்வோம்
என்று வீருப்புப் பேசுவதா?
செ! என்ன தகாத காரியம்
செய்தனர் புலவர்கள்! பொறுக்க
வேண்டும்! பொறுத்து இருக்க
வேண்டும். அது தான் சரி.
குறள் பயின்ற அமைச்சர்-இரா
மகிருஷ்ண மடாலயத்தில் அறம்
பயின்று, பின், கம்பன் கலை
பயின்ற அமைச்சர்—கலைக்
களஞ்சியம் என்னும் புது அணி
யைத் தமிழ் அன்னைக்குச் சூட்டும்
தமிழ் அமைச்சர் "நல்வழி"
காட்டுகிறார். தமிழ்ப் புலவர்
கள் பின் பற்றுவாராக!

### மவுண்ட் பேட்டன் திரும்பினர்!

"மிச்ச இந்தியா" வின்
கவர்னர் ஜெனரல் மவுண்ட்
பேட்டன், எலிசபெத் இள
வரசியின் திருமணத்தை முன்
னிட்டு சீமைக்குச் சென்றவர்,
இந்தியாவுக்குத் **திரும்பி விட்டார்.**
**திரும்பி விட்டார்** என்ற எட்டு
எழுத்துக்களையும் தினசரிகளில்
பார்த்ததும், மயிலாப்பூரும், திரு
வல்லிக்கேணியும், மாம்பலமும்,
அடையாறும் கண்கலங்கி, கதி
கலங்கி, நெஞ்சுருகி, நீள விருந்
தினராம். "ஏனோ வருத்தம்?
மன்றல் காணச் சென்றவர்
கண்டார் அரசிளங் குமரியின்
திருமணத்தை; மணம் முடிந்
தது; மீண்டார்; மீள்வதுதானே
முறை; மீண்டது கண்டு எவர்
தான் ஏன் வருந்தவேண்டும்"
என்று நீங்கள் நினைக்கலாம்.
ஆனால் உங்களுக்கென்ன தெரி
யும் மயிலாப்பூரார் வருத்தம்!
"மவுண்ட்பேட்டன் திரும்பி
வர மாட்டார்; சென்றவர்
சென்றவரே; இங்கிலாந்தை
ஆள்வார்தம் குழுவிலேயே அவ
ரும் இடம் பெறுவார்; ஆச்சாரி
யார் அவர்களே இனி எங்
நாளும் கவர்னர் ஜெனரல்"
என்றொரு சேதி வந்தது சென்ற
கிழமை. அந்தச் சேதியை
நாளிதழ்களில் படித்துப் படித்
துப் பூரிப்படைந்த கூட்டம்
இந்தத் துக்ககரமான சேதியைக்
கேட்டால் வருந்தாமலிருக்க
முடியுமா? நீங்களே சொல்
லுங்கள்.

### சென்னையே! நெல்லையைப் பார்!

திருநெல்வேலி நகராட்சி
யினர், பெண்ட்லண்டு கட்டிடம்
என்று இதுவரை வழங்கிவந்த
நகராட்சிக் கட்டிடத்தைச்
**சிதம்பரனூர் கட்டிடம்** என்று
மாற்றி அழைக்கத் தொடங்கி
யிருக்கின்றனர் இத் திங்கள்
தொடக்கம் முதல். நம்
பாராட்டு, திருநெல்வேலி நக
ராட்சிக் கழகத்திற்கு! கஸ்தூரி
பாய் கட்டிடம் என்றோ, டாடா
மண்டல் என்றோ, டால்மியா
மந்திர் என்றோ, கிருபாலினி
கிரகம் என்றோ, தேசாய் நிலையம்
என்றோ பெயர் சூட்டாது
சிதம்பரனூர் பெயர் சூட்டினரே,
இந்தச் செயல் உண்மையி
லேயே பாராட்டப்பட வேண்டி
யது; மகிழ்ச்சிக்கும் உரியது.
தன்மான உணர்ச்சி, தாழ்ந்து
கிடந்த தமிழகத்தில் தலை தூக்கி
எழுவதெனில் யாரே மகிழார்!
திராவிட இனப்பற்று வளர்வது
வும் பரவுவதும் கண்டு நம் உள்
ளம் களிப்புச்சிந்து இசைப்பதும்
இயற்கையே யன்றோ!

ஆனால் ஒன்று. சென்னை நகராட்சியினர் நெல்வேலி நகர சபையைப் பின்பற்றுவாரா? ஜார்ஜ் டவுன் என்னும் பெயரை எடுத்தெறிந்துவிட்டு, சிதம்பரனார் நகர் எனும் பெயரை ஏற்பாரா? தமிழகத்தின் தலை நகரம் என்ற முறையில் சென்னை பிற நகரங்களுக்கு வழிகாட்டியிருக்க வேண்டும். வழிகாட்டித் தவறிவிட்டது. திருநெல்வேலி அந்தப் பெருமையைத் தட்டிப் பறித்துக் கொண்டது. வழிகாட்டாவிட்டால் போகிறது, நெல்வேலி காட்டிய வழியையேனும் பின்பற்றுமா சென்னை?

**அவசர அவசரமாக..........!**

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண பண்டார சந்நிதிகள் எட்டயபுரம் பாரதி மண்டபத்திற்கு இரண்டு வெள்ளி விளக்குகள் அளித்தனர், மண்டபத்தின் ஒளி மங்காதிருப்பதற்காக.

பிறகு, அந்த இரு விளக்குகளும் தூங்கா விளக்குகளாக என்றென்றும் ஒளி வீசிக் கொண்டிருப்பதற்காக ஒரு பண முடிப்பு கொடுத்தனர்.

பிறகு, தஞ்சை மாவட்ட காங்கிரஸ் கட்டிட நிதிக்காக ரூபா ஐயாயிரம் நன்கொடை வழங்கினர்.

இம் மூன்று செயல்களையும் பார்த்துக் கொண்டேயிருந்த திருப்பனந்தாள் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் அவர்கள், "இவை என்ன பிச்சைக் காசுகள்! தமிழ்க் கலை, இசை இவைகளின் வளர்ச்சிக்காக நான் தருகிறேன் ரூபா ஐந்நூறாயிரம்" என்று எடுத்து வீசியிருக்கிறார் ஐந்து இலட்சம் வெண்பொற்காசுகளை.

முன்னம், ஓர் மடாதிபதி தங்கச் செங்கோல் ஒன்றை பண்டித ஜவகர்லால் நேருவிற்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்.

வேறொரு மடாதிபதி தமிழ்க் கல்லூரி ஒன்று கண்டு, அதற்குத் தேவையான பொருளும் ஒதுக்கி வைத்துள்ளார்.

இப்படியாக மடாதிபதிகள், தம் காவி ஆடையை வரிந்து கட்டிக்கொண்டு திடீரென்று பொது நலப் பணிகளைச் செய்ய முன் வந்த மாயம் என்ன என்று தானே கேட்கிறீர்கள்? மாயம் என்ன? எல்லாம் சூழ்ச்சித் திருவிளையாடல் தான். மடாதிபதிகள் என்ற பெயரில் சிலர் உலவுவதே நாட்டிற்கு ஒரு பெருத்த அவமானம் என்ற நல்லுணர்ச்சி மிக வேகமாகத் தமிழ் நாட்டில் பரவி வருகிறது. மடாதிபதிகள் மக்கள் நலத்திற்கான தொண்டு எதுவும் செய்வதில்லை; செய்ய முடியாது; செய்வதற்கான அமைப்புகள் அல்ல மடாலயங்கள்; ஆகவே அவை தொலைய வேண்டும் என்று தமிழ் நாடு, கட்சி வேற்றுமையின்றி, ஒரே குரலில் முழக்கமிடத்தொடங்கி விட்டது மக்கள் ஆட்சி மலர வேண்டுமானால் சிற்றரசர்களும், சீமான்களும், நிலப் பிரபுக்களும், பண மூட்டைகளும் மறைந்தால் மட்டும் போதாது; புரோகிதப் புல்லர்களும் மடாலய தேவதைகளும் கூடவே தொலையவேண்டும்; முதலாளித்வம் மட்டுமல்ல—அதன் 'ஆதி பிதா'வான வர்ணாஸ்ரமும் தொலையவேண்டும் என்னும் கருத்து தமிழர் உள்ளந்தோறும் இடம்பெற்றுவிட்டதென்பதை நன்குணர்ந்து விட்டனர் மடாதிபதிகள். எனவேதான் நாங்களும் நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்று மக்களுக்குக் காட்ட முந்துகின்றனர் அவசர அவசரமாக நன்கொடை அள்ளி வீசுவதன் மு...

"தருமபுரத்தார்க்கு எவ... தமிழ்ப் பற்று! திரு... துறையார் தேசபக்திக்கு ... வும் உண்டோ! திருப்... தாள் மடாதிபதி என்னெ... அரிய பணிகள் ஆற்றியுள்... தெரியுமோ! நம்ம மருங்... மடாதிபதிக்கு கலை வளர்ச்... உள்ள அக்கரை ரசிக... டி. கே. சிக்குக் கூடக் ... யாது, தெரியுமோ" என்... லாம் மக்கள் பேசுவர்—ம... பேசும்படி செய்ய முடியும்... தகைய நன்கொடைகளால்... றெண்ணுகின்றனர் பல ம... பதிகள். வெளுத்ததெல்... பால்; மின்னுவதெல்... பான் என்று எண்ணும் ... கையுடைய சிலர் அதி... பேசவும் செய்கின்ற... ஆனால் இந்த வித்தை ... நாட்களுக்குப் பலிக்காது... மரியாதை இயக்கம் நாட்... எழுப்பிவரும் மறும... சகாப்தம் மடாதிபதிக... மத மடமையாளர்களையும்... கிதர்களையும் பிற பிற்போ... சக்திகளையும் ஒழித்தே தீ... ஒழிப்பதற்கே பிறந்த இ... அது.

---


**போர்வாள்**

திராவிடர் வார வெளி...

உள் நாடு வெ...

தனி இதழ் ரூ. 0 1 6 0
ஆண்டு 1-க்கு 5 0 0 6
6 மாதங்கட்கு 2 8 0 3

விபரங்களுக்கு:

போர் வாள்,
பவழக்காரத் தெரு, செ...

# விருந்து, டில்லியில்!

ல்லிக்குச் சென்றிருந்த காம
ர், கவர்னர் ஜெனரல் ஆச்
யாருக்கு ஒரு விருந்து வைத்
ஆச்சாரியாரும் காமராஜ
ு ஒரு விருந்து வைத்தார்.
ந்து, எவருக்கும் மகிழ்ச்சி
ந்தான் தரும். காமராஜர்
ந்தளித்தபோது ஆச்சாரியா
ஆச்சாரியார் விருந்தளித்த
ு காமராஜரும் மகிழாமல்
திருக்க முடியாது. விருந்
இருந்த இனிப்பு இருவர்
த்திலும் களிப்பு மூட்டியே
கும்.

ப்பரங்குன்றத்தில் அன்றொரு
காமராஜர் ஆச்சாரியாருக்
கொடுத்த "விருந்து"
! திருச்செங்கோட்டில்
கு முன்னரும் பின்னரும்
ாரியார் காமராஜருக்கு
த "விருந்து"ம் காரம்.
புது டில்லியில், அரசாங்க
கையில், இருவரும் ஒருவர்க்
வர் பரிமாறிக் கொண்ட
த்தா இனிப்பு!

ாரணமாக விருந்து சாப்பிடு
ள் முதலில் 'இனிப்பு' உண்டு
பிறகு 'காரம்' சாப்பிடுவது
ம். ஆனால் ஆச்சாரியாரும்
ஜருமோ முதலில் உண்டது
பிறகு சுவைத்ததே இனி
தலைவர்கள் அல்லவா அவர்
ஆகவே தான் தனிவழி
னர்-நம் போன்ற சாமா
ளின் தேய்ந்துபோன வழக்
ப் பின்பற்றாமல்!

காமராஜருக்கு விருந்து
தபோதும், காமராஜர்
த்தான் ஏற்றபோதும் ஆச்
் களிப்படைந்திருப்பார்—
இயற்கை—விருந்து களிப்
ன் தரும்—சாமானியர்கள்
களிப்பை மட்டுந்தான்
ஆனால் இது தலைவர்கள்
லவா—ஆகவே களிப்பு
றி வேறு சில சுவைகளை
ிருக்க வேண்டும்.

தமேசையின் ஒரு புறம்
ாரும் மறுபுறம் காம
அமர்ந்து "சிற்றுண"
வேளை ஆச்சாரியாரின்

விழிகள் அன்பைத்தான் பொழிந்திருக்கும். ஆனால் அவருடைய உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் அலை மோதினவோ, யார் கண்டார்?

"காமராஜரே! கூவினீரே! கொக்கரித்தீரே! காங்கிரசில் சர்வசாதாரண உறுப்பினராகக்கூட என்னைச் சேர்க்க முடியாது என்று உறுமினீரே! தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைமை என்னை அண்டாதவாறு தொண்டர் மாநாடு கூட்டி அண்டம் அதிர ஆர்ப்பரித்தீரே! முதலமைச்சர் பதவி எனக்குக் கிட்டாதவாறு செய்ய முரசு கொட்டி ஊர்வலம் வந்தீரே தமிழகம் முழுவதும். இதோ பாரும் நான் எங்கிருக்கிறேன் என்று! மாகாண முதலமைச்சர் பதவி எனக்குக் கிட்டாதவாறு செய்தீர். உண்மைதான்! ஆனால் அதனால் எனக்கென்ன நஷ்டமா—கவர்னர் பதவி யல்லவோ என் காலடியில் வந்து வீழ்ந்தது—தானாக, நான் கேளாமல்! தமிழகத்திலிருந்து என்னை விரட்டினீரே, தொண்டர் முகாம் அமைத்து ஆகஸ்டு துரோகிக்குப் பதவியில்லை யென்று ரஹீம்களையும் பக்தவச்சலங்களையும் சொக்கலிங்கங்களையும் உரத்த குரலில் ஊரறியக் கூவச் செய்தீரே, அந்தக் கூக்குரல் என்னை என்ன செய்தது—கவர்னர் ஜெனரல் எனும் மிக உயர்ந்த நிலைமைக்குத் தள்ளிற்று. வகுப்புத் துவேஷமிருந்தது உமக்கு; 'நாயக்கர் தத்துவம்' உம்மையும் அறியாமல் உம் உள்ளத்தில் குடி புகுந்தது. விளைவைப் பார்த்தீரா உமக்கே குழி பறிக்கின்றனர் உம்மால் கிளப்பி விடப்பட்ட தொண்டர்கள். மூலைக்குமூலை நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் பறக்கின்றன பாரீர் உம்மீது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை சாஸ்வதம் என்று எண்ணிக்கொண்டு என்னைக் கவிழ்க்கப் பார்த்தீரே! இப்போது என்ன சொல்கிறீர்?"

இந்த வாசகங்களை ஆச்சாரியார் சொல்லியிருக்க மாட்டார்.

"நாடார், இந்த ஸ்வீட் போதுமா?"

"அந்த அல்வா இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள்!"

"பாதம்கீர் ஏன் இவ்வளவு மிச்சம் வைத்துவிட்டீர்கள்?"

"குலோப்ஜான் கொண்டுவரச் சொல்லட்டுமா?"

"என்ன இப்படி இளைத்து விட்டீர்கள்! நன்றாய்ச் சாப்பிடும்"

இவை போன்ற மொழிகளைத்தான் வீசியிருப்பார் ஆச்சாரியார். ஆனால் அவருடைய உள்ளம்! அது என்ன எண்ணியிருக்கும்! போராடிய வீரரே, வந்தீராவழிக்கு என்று எண்ணியிருக்குமோ அல்லது இராமாயண காலத்து விபீஷணனைப் பற்றிச் சிந்தித்திருக்குமோ, அல்லது பகைவர் கோட்டத்திலிருந்து ஒரு விபீஷணனைத் தட்டிப் பறித்த "இராமபிரானின்" அற்புத சக்தியைப்பற்றி நினைப்புக் கொண்டிருக்குமோ என்னவோ நாமறியோம். நாம் என்ன அகத்திணை வல்லவரா அதனை அறிந்திருக்க!

---


**உங்களிடம் இருக்கிறதா?**

**இல்லையானால்**

ரூ 5. மணியாடர் அனுப்புங்கள். தபால் செலவின்றி அனுப்பப்படும்.

1. காஸ்திகர் யார்? 0 6
(கா. அப்பாத்துரை M.A.L.T.,)
2. திராவிடர் நாகரிகம் 0 10
3. பெண்கள் உலகம் அன்றும் இன்றும் 0 12
4. மனிதன் எப்படித் தோன்றினான்? 0 8
5. கவிஞர் விழா (6 ஓரங்க நாடகங்கள்) 0 6
6. தமிழ்க் கடவுளுக்கு ஆரியப்பாடலா? 0 4
7. முச்சங்கம் 0 8
8. தமிழரின் மறுமலர்ச்சி 0 8
(C.N. அண்ணாதுரை M.A.)
9. எது இசை? 0 6
(பாரதிதாசன்)
10. பாம்பு வணக்கம் 0 4
(ஆராய்ச்சி நூல்)
11. சிந்துவெளித் தமிழர் 0 8

முத்தமிழ் நிலையம்,
75, வரதாமுத்தியப்பன் தெரு,
சென்னை 1.

# குஜராத்தியின் குறும்பு!

"கருஞ் சட்டைப் படையினர்மீது பொதுமக்கள் ஆத்திரம்!"

"திராவிடர் கழக ஊர்வலத்தில் அமளி! அடிதடி! குழப்பம்! கலாட்டா!"

"காங்கிரஸ்காரர்—கருஞ்சட்டையினர் கை கலப்பு"

"சுயமரியாதைக்காரர்கட்கு வண்ணாரப்பேட்டை வாசிகளின் சூடு!"

"கொதித்தெழுந்த மக்களின் கோபாவேசம்!"

"திராவிடஸ்தான் ஊர்வலம் குழப்பத்தில் முடிந்தது!"

—24-11-47 அன்று காலையிலும் மாலையிலும் வெளியான தேசீய ஏடுகளில் காணப்பட்ட தலைப்புகள் இவை. ஒரு குஜராத்தியின் குறும்பு பொதுமக்களின் ஆத்திரமாக உருமாறியிருக்கிறது ஆரியத் தாள்களின் அச்செழுத்துக் கோவையில்.

வீர இளைஞர்கள் இரண்டாயிரவர் கருஞ்சட்டை அணிந்து முன்னே செல்ல, ஆயிரமாயிரம் திராவிடர்கள் "வெல்க திராவிடம்", "வீழ்க ஆரியம்" எனும் வீர ஒலிகளை எழுப்பியவாறு பின்னேவர, படைத் தலைவர்கள் முன்னும் பின்னும் நின்று அணிவகுப்பை ஒழுங்குறுத்திவர, கருஞ்சேனை ஊர்வலம் சென்னை வீதிகளில் சென்றது அன்று. காலையில் தூறல் என்றாலும் மாலையில் அது மறைந்து காற்றோட்டமுள்ள சூழ்நிலை ஏற்பட, மனதுக்கினிய அந்நிலையில், ஊர்வலம், மக்கள் மன்றத்தில் அரங்கேறிவிட்ட திராவிடப் பிரிவினை முரசினை முழக்கியவண்ணம் சென்னையின் பல பகுதிகளை வலம் வந்தது. பின்னே, அறுபதினாயிரவர் திரண்டு குழுமிய பெருங்கூட்டம் இராபின்சன் பூம்பொழிலில்! மக்கட் கடல் நடுவே சிங்க ஏறு எனச் செம்மாந்து நின்ற வண்ணம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தன் சிறை வாழ்க்கை அநுபவங்களை எடுத்து மொழிந்ததும், பழம்பெரும் சுயமரியாதை வீரர் அழகர்சாமி எழும்பிவந்த ஐயவினாக்களுக்குச் செவ்வன் இறை இறுத்ததும், இன உணர்ச்சியால் உந்தப்பட்டு ஓடோடி வந்திருந்த இளங்காளைகள் அனைவரும் "வாழிய பெரியார்! வாழ்க அவர் பட்டாளம்!" என முழக்கமிட்டதும் வந்திருந்தார் அனைவர் உள்ளத்திலும் உணர்ச்சித் தேன் பாய்ச்சிற்று. ஊர்வலத்திலும் சரி, கூட்டத்திலும் சரி, மக்கள் காட்டிய ஊக்கத்திற்கும் உற்சாகத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை.

இத்தகைய பெரு நிகழ்ச்சியை யததான் கட்டுப்பாடாக இருட்டடிப்பு செய்துவிட்டு, வடசென்னையில் செல்வத்துடனும் செல்வாக்குடனும் உள்ள

ஒரு குஜராத்தி முதலாளிய
ஏவி விடப்பட்ட சில குறும்
கள் ஊர்வலத்தின்மீது
லெறிந்ததை மட்டும் முந்
கொட்டை அளவு பருமனு
எழுத்துக்களில் முதல் பக்
தில் வெளியிட்டுள்ளன தேசி
தாள்கள்! எவ்வளவு நெஞ்
உரம்! என்ன நேர்மைத் திற
எத்தகைய ஓர வஞ்சனை!

சென்னையின் ஒரு கோ
லிருந்து மறுகோடி வரை
பவனி வந்தது மிகப் பெ
தோர் திராவிடர் ஊர்வலம்
அதுபற்றி ஓர் எழுத்துமில்லை

ஆயிரமாயிரம் திராவிடர்
ஈண்டினர் ஒன்றாய்; இட்ட
இடிமுழக்கம்; தொலைக பே
சம் என வலலோசை கிள
னர்—அந்தக் காட்சியின் ம
சியை எடுத்துரைக்க ம
இல்லை, மார்க்கம் இருந்தும்

நகைச்சுவை அரசர் அ
க்கே உரித்தான அந்தக் கண்
மொழிகளையும் கொச்சை
களையும், வீரன் வில்லிலிரு
அம்புகளைத் தொடுத்துக்கொ
டே இருப்பதுபோல, எ
தெடுத்து வீசிக்கொண்டேயி
தார், கூடியிருந்த அறுப


போர்வாள்

**பொங்கல் மலர்**

பக்கம் 60 விலை அணு 8

தனிப்படி வேண்டுவோர் 0-9-0 தபால் தலை அனுப்பவும்.

சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கொண்டது.

அழகிய அமைப்புடையது.

விற்பனையாளர்கள் தேவையான படிகளுக்கு படிக்கு 4 அணு வீதம் முன் பணம் அனுப்பி பதிந்து கொள்ளவும்.

சொற்ப படிகளே அச்சிடப் படுகின்றன. வேண்டுவோர் உள்ளூர் விற்பனையாளரிடமோ அல்லது நேரில் எம்மிடமோ பதிந்துகொள்ளவும்.

"போர்வாள் நிலையம்"

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

வரும் சிரித்துச் சிரித்துக் த்துக்களை அறிந்து கொள் வகையில்—நல்ல உள்ளப் பு இல்லை இதனைத் தெரி .

பாதுமக்கள் திராவிடநாடு விடருக்கே என்னும் தம் ட்சிய கீதத்தை இசைத்துக் டினர் "கேளாக்காது" கட் கேட்கும் அளவு உருக்கத் ன்--அதன் சிறப்பை உரைக் அளவு சகிப்புத் தன்மை பொறுப் புணர்ச்சியோ துால எண்ணமோ இல்லை. வாழ்ந்தால் திராவிடத்தில்! த்தால் சுடுகாட்டில்!" என்று ம்பிய குரலோசையை உரு த்துக் காட்ட தம் இனப் பு ஒப்பவில்லை சென்னை சரிகட்கு.

ஞல் தமிழ்நாட்டுச் சென்னை அலுமினியத் தொழிற்சாலை மத்து தமிழர் செல்வத்தைச் ண்டி வரும் ஒரு வட குஜராத்தி முத , திராவிடப் பிரிவினை கம் தென்னாட்டில் வளர தம் வளமான சுரண்டல் வு குறுகிக் குறுகி இறுதி ஒரு பிடி சாம்பலாய்ச் சுருங் போகும் எனபதை நன்றாய் ந்த காரணத்தால், ஊர் முடிந்த பிறகு, மக்கள் சிறு குழுவினராய்த் தனித் ய பிரிந்து செல்லும்போது, சில குண்டர்களைக்கொ தமிழர்களைத் தாக்கிய ச்சியை மட்டும் பெரிது வெளியிட வேண்டியது இன்றியமையாத தேவை தோன்றிற்று அந்த ஆரிய டு!

ன்றியதில் வியப்பில்லை— அவர்களுடைய பரம்ப பண்பு. குஜராத்தி முத குறும்பு செய்ததிலும் பில்லை—திராவிட இன அவர்களின் சுரண்டல் த்தைத் தகர்த் தெறிவ

தால் விளைந்த ஆத்திரத்தின் குமுறல் அது. ஆனால் சில திராவிடத் தோழர்கள்-தேசீய முகாமில் இருக்கும்படியான சூழ்நிலையில் இருப்பவர்கள்—இது குஜராத்தியின் குறும்பு என்பதை அறியாமல், திராவிடர் கழகத் தோழர்கள் சிலரிடம் மல்லுக்கு நின்றதுதான் நமக்கு உண்மையிலேயே வியப்பூட்டுகிறது.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து தென்னாட்டை உடனடியாக மீட்டுத் தீரவேண்டிய இந்நாளில், அர்த்தமற்ற சின்னஞ்சிறு பூசல்களை முன்வைத்து, திராவிடர்—திராவிடர் என்றால் பாட்டாளிகள், வெவ்வேறு அரசியல் முகாம்களில் உள்ள காரணத்தால், தமக்குள் பிணக்குறுவதும்; பிணக்கின் காரணமாக, தம் அனைவர் வாழ்வையும் வதைக்கத் திட்டமிடும் பனியாக்கள் தென்னாட்டுப் பொருளியலில் தூவிவரும் நச்சு விதைகளை மறந்துவிடுவதும் மன்னிக்கமுடியாத குற்றங்கள் என்பதே நம் கருத்து.

தமிழகம் உட்படத் தென்னாடு முழுவதும் அடிமைச் சங்கிலிகளால் இறுகப் பிணிக்கப்பட்டிருக்கின்றது இன்றும், இன்னும். வடக்கு விடுதலை பெற்றுவிட்டது; ஆனால் தெற்கு பழைய விலங்கு மாறி புது விலங்கைப் பூட்டிக்கொண்டு வதைபடுகிறது இன்றளவும். விடுதலைவேண்டும் தமிழகத்திற்கு-திராவிடத்திற்கு. திராவிடநல் திருநாட்டு மக்கள் தம் கால்களையும் கைகளையும் கழுத்தினையும் வளைத்துள்ள அழுத்தமான தளைகள் அத்தனையும் தகர்த்தெறியப் படவேண்டும். இதற்கோர் அறப்போர் புரிந்தாக வேண்டும் திராவிடர். உடனே நடந்தாகவேண்டும் இப்போராட்டம். இல்லையேல் திராவிடம் வரும்பல நூற்றாண்டு கட்கு அடிமை வாழ்வினிற் கிடந்து உழலவே நேரிடும். இத்தகு நிலையில் திராவிடர் ஒன்றுபட்ட முன்னணி அமைத்து, கட்சிகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, தென்னாட்டை மீட்கும் விடுதலைப் போருக்கு முரசு கொட்ட வேண்டுமே தவிர, அணிந்துள்ள சட்டையின் நிறம் மாறுபடுவதன் காரணமாகத் தாமும் மாறுபட்டு, தம்முளே தாம் பிணங்கி நிற்றல், தாம் பிறந்த பொன்னாட்டிற்குத் துளியளவும் நன்மைபயவாது என்பது உறுதி.

---


## ஈரோட்டுப் பாதை

ஆசிரியர்:
மா. இளஞ்செழியன் (B. A. Hons.)

[தமிழ் நாட்டிலே வீசிய பெரும் புயல் சுயமரியாதை இயக்கம்; புயல் வீசிய விதத்தைக் கூறுவது இந் நூல்.]

விலை அணா 8 அழகிய பதிப்பு

தனிப் பிரதி வேண்டுவோர் 9 அணா தபால் தலை அனுப்பவும்.

வியாபாரிகளுக்கு 20 பெர்ஸென்ட் கழிவுண்டு.

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு,
சென்னை-1.

## ஊர்க்குருவி பருந்தாயிற்று!

ஆமாம், உண்மையாகத்தான்! உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா என்பது பழமொழி. ஆகாதப்பா ஆகாது என்றுதான் எவரும் கூறுவர் இதுபற்றிக் கேட்டால். விஞ்ஞான உலகில் எத்தனையோ அதிசயமான புதுப்புது கண்டுபிடிப்புகள் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன என்றாலும் ஊர்க்குருவியைப் பருந்தாக்கும் முறைமட்டும் இன்னும் யாராலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் தோழியர் விஜயலட்சுமி பண்டிட் கூறுகிறார் ஊர்க்குருவி பருந்தாகும் என்று! கூறுவது மட்டுமா, ஊர்க்குருவி பருந்தாக மாறிவிட்டது என்ற எண்ணத்தில் அதன் தலையில் பனங்காய் ஒன்றையும் சுமத்தியிருக்கிறார்.

ஆச்சரியப் படாதீர்கள், வீர உரை ஆற்றவல்ல விஜயலட்சுமியார் குருவியைப் பருந்தாக மாற்றித்தான் இருக்கிறார்!

இதோ ஆதாரம்:

ஐக்கிய நாடுகளின் மன்றத்தில், தான், இந்தியாவின் பிரதிநிதியாக இருப்பதை முன்னிட்டு அந்த மன்றத்தைச் சேர்ந்த மற்ற எல்லா நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் தோழியர் விஜயலட்சுமியார் அண்மையில் விருந்தொன்று நடத்தினார். அந்தத் தேனீர் விருந்தின் செலவு என்ன தெரியுமோ? 4 லட்சம் ரூபா! ஆம், ரூபா நானூறு ஆயிரம்! விடுகதை அல்ல, உண்மை.

நான்கு லட்சம் ரூபா செலவில் இந்த விருந்தை விஜயலட்சுமியார் யார் சார்பில் நடத்தினார் தெரியுமோ? காந்தியாரால் தரித்திர நாராயணன் என்னும் அருமைத் திருநாமம் சூட்டப்பட்ட ஏழை உழவன் சார்பில்! அதாவது இந்தியாவின் சார்பில்.

இப்போது நீங்களே சொல்லுங்கள் ஊர்க்குருவி பருந்தாயிற்று, இல்லையா? இல்லையென்றால் எப்படி இந்தச் சின்னஞ்சிறு ஊர்க்குருவி இந்தியா) தலையில் இத்தனை பெரிய பனம் பழம் நிறுத்தப்பட்டது? பதில் சொல்வீர்களா? சொல்லத் துணிவீர்களா? சொல்ல முடியுமா? சொல்லாவிட்டால், வயிறார உண்ண உணவில்லை என்று சொல்லி அதோ துக்க வாரம் கொண்டாடுகிறார்களே தமிழ்ப் புலவர்கள், அவர்கள் என்ன நினைப்பார்கள் இந்த விருந்துபற்றி? மனம் நொந்து கேட்கிறோம், என்ன நினைப்பார்கள்?

---

## நகைச்சுவை அரசர் குடும்பத்தில் புரட்சித் திருமணம்.

நகைச்சுவை அரசர் கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் மைத்துனரும் தோழியர் டி. ஏ. மதுரத்தின் தம்பியுமாகிய தோழர் டி. ஏ. பால சுப்பிரமணியனார்க்கும் தோழியர் மோகனம்பாளுக்கும் நவம்பர் 24 காலை சடங்குகள் அற்ற, புரோகிதம் அற்ற, சீர்திருத்தத் திருமணம் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் சென்னையில் சிறப்புற நடைபெற்றது. வெள்ளம்போல் தமிழர் கூட்டம் அன்று தியாகராய நகரில் செறிந்து மிடைந்து நின்றது. திரைப்பட உலகில் புரட்சிக் கருத்துக்களை நடமாட விட்ட கலைவாணர் குடும்ப வாழ்க்கையிலும் பு[...] உணர்ச்சியினை எழுப்பியது[...] களிப்புறாத தமிழர் எவரும் இ[...] சீர்திருத்தத் திருமணங்களின் [...]வத்தைத் தெளி தமிழில் [...] பிடிப்புச் செய்தார் தோழர் [...]ணாதுரை. ப. ஜீவானந்தம், ம[...] சிவஞானம் இருவரும் பின் [...]னர். அவர்கள் பேச்சு அ[...]வின் பேச்சுக்கு அரண் செ[...] தன்மையிலேயே இருந்தன[...] என். இராஜரத்தினம், அ[...]ளால் அளிக்கப்பட்ட இசை[...]தும் என். எஸ். கே. யின் [...] விருந்தும் பிற்பகல் நிகழ்ச்சி[...] குறிப்பிடத்தக்கவை. வாழ்க [...]மணத் தம்பதிகள்! வாழ்க [...] எஸ். கே! வெல்க புரட்சி!

---


### இனும்

உங்கள் வியாதி எது[...] யிருந்தாலும் சரி கவ[...] வேண்டாம். சிறந்த முறை[...] உயர்ந்த வைத்தியம். விபர[...] திற்குத் தபால் தலையுட[...] எழுதவும்.

**ஜெயராம் வைத்தியசாலை**

28. காசி விஸ்வநாதர் கீழவீ[...]

கும்பகோண[...]



## அறிஞர் அண்ணாதுரையின்

### எழுத்தோவியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரோமாபுரி ராணிகள் | 2-4-0 | 5. கற்பனைச் சித்திரம் | 1- 0-[...] |
| 2. கம்பரசம் | 1-8-0 | 6. வர்ணாஸ்ரமம் | 0-12-[...] |
| 3. குமரிக்கோட்டம் | 1-0-0 | 7. ஆரியமாயை | 1- 0-[...] |
| 4. விடுதலைப்போர் | 1-0-0 | 8. மே தினம் | 0- 5-[...] |

குறிப்பு:—"ஆரிய மாயை படிக்கமட்டுமே யன்றிப் பி[...]ருக்கு விஷய விளக்கமாற்றவும், சந்தேகங்களைப் போக்கவும் மாற்றாரின் எதிர்ப்புரைகளுக்கு மறுப்புரை தரவும், பேசு[...] பயன்படும் என்று கருதுகிறேன். பேச்சாளர்களுக்குப் பெரு[...] காரியாக இந்நூல் இருக்கும்.

ஆரிய ஆதிக்கத்திலிருந்து திராவிடநாடு விடுபட வழிவகை[...] கோருவோருக்கு இந்நூல் எழுச்சியூட்டும் என்பது என் நம்பி[...]கை. திராவிடத் தோழர்கள் இதனைச் சரியாகப் பயன்படுத்தி[...] கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்." —சி. என். அண்ணாது[...]

**திராவிடப் பண்ணை** தெப்பக்குளம், திருச்[...]